பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி ௴ 15 உ வெள்ளிக்கிழமை [29-03-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 122

# கீரிமலையில் கடும் மோதல்

## பொம்மர், ஹெலி உதவியுடன் படையினர் முன்னேற முயற்சி

யாழ்ப்பாணம்: மார்ச் 29

கீரிமலைப் பகுதியில் நேற்றுக் காலை முதல் மாலை வரை கடும் மோதல் இடம் பெற்றது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டல் மற்றும் மாவிட்டபுரம் முகாம் பகுதிகளிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கீரிமலைப் பகுதியை நோக்கி முன்னேற முயன்றபோதே அப்பகுதியில் கடும் மோதல் வெடித்தது.

பொம்மர்கள், ஹெலிக்கொப்டர்கள் ஆகியவை வான்தாக்கு

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



புதுத் துடைப்பம் நல்லாத்தான் கூட்டும் கண்டியளோ......!

## வவுனியா; மூவர் பலி!

வவுனியாவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் 3 படையினர் உயிரிழந்தனர். ஆறு படையினர் காயம் அடைந்தனர்.

# 3 நாட்களுக்கு யுத்த நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

நாளை வடக்கு, கிழக்கில் நடைபெறவிருக்கும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் விசேட பரீட்சையை ஒட்டி அரசு அறிவித்திருக்கும் மூன்று நாள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் இன்று காலை 6 மணிக்கு அமுலுக்கு வருகின்றது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் சுமார் 35 ஆயிரம் மாணவர்களின் நலன் கருதி இந்தச் சண்டை நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

மேற்படி பரீட்சை முடிவடையும் வரை ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தும்படி பிரதேச கமாண்டர்களுக்குத் தாம் உத்தரவிட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

இதற்கிடையில் —

இந்த யுத்த நிறுத்தம் குறித்து கூட்டுப்படைத் தலைமையகம் கடந்த செவ்வாயன்று உத்தியோக பூர்வமாக பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தது எனவும் அறிய வந்தது. [உ-ஏ-3]

## அகதி முகாமில் புகுந்து படையினர் அட்டகாசம்

### ஒருவர் மரணம்;6 பேர் படுகாயம்

மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலய அகதி முகாமில் இராணுவத்தினர் புரிந்த அட்டகாசத்தின் விளைவாக ஒரு இளைஞர் பலியானார். மற்றும் ஆறு பேர் காயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த பிரஸ்தாப சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

தமிழர்கள் மட்டுமே தங்கியிருக்கும் அகதி முகாமிற்குள் இராணுவத்தினர் திடீரெனப் புகுந்தனர். அகதிகளை கண்ட மாதிரித் தாக்கிப் பெரும் அட்டகாசம் புரிந்தனர். அதன் விளைவாக 6 பேர் படுகாயமுற்றனர்.

முகாமிலிருந்து வெளியே வந்து ஆகாயத்தை நோக்கிப் பல தடவைகள் சுட்டனர். அதனைத் தொடர்ந்து மின் கம்பி ஒன்று அறுந்து விழுந்தது. விழுந்த மின்கம்பி அகதி முகாமில் இருந்த, புதுக்குடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மீது பட்டதால் அவர் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார். [அ-15]

# ராஜீவின் வாகன அணி மீது தாக்கு!

புதுடில்லி, மார்ச் 29

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி சென்ற மோட்டார் வாகன அணியை 2 ஆயிரம் பேர் கொண்ட கூட்டம் ஒன்று நேற்றுத் தாக்கியது. ராஜீவ் காந்தி காயங்கள் எதுவுமின்றி தப்பினார்.

காந்தியின் மகன் ராஹுலை காரில் இருந்து இழுத்து வெளியே எடுக்க கூட்டத்தினர் முயன்றனர். அம்முயற்சியை காங்கிரஸ் தொண்டர்கள் தலையிட்டு தடுத்து நிறுத்தினர்.

இச்சம்பவம் பீஹார் மாநிலத்தின் தலைநகர் பாட்னாவில் இருந்து 160 மைல் தூரத்தில் உள்ள பகுதியில் நேற்று இடம்பெற்றது.

அச்சம்பவத்தின் போது வாகன அணியில் சென்ற பல கார்கள் சேதமடைந்தன.

வன்செயல்களின்போது பாதிக்கப்பட்ட பிரதேசம் ஒன்றைப் பார்வையிட்ட பின்னர் திரு. ராஜீவ் காந்தி திரும்பிக்கொண்டிருந்த போதே அவரது வாகன அணி தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

கீரிமலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த பொதுமக்கள் இருவர் யாழ்- போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தர்மலிங்கம் பாக்கியவதி [16 வயது] சின்னையா [சுந்தரலிங்கம் [32 வயது] ஆகியோரே காயமடைந்தவர்களாவர். [உ-15-3]

## இந்திய மீனவர் பிரச்சினை; இலங்கைஅரசுக்கு கண்டனம்

சென்னை, மார்ச் 29

இந்திய மீனவர் மீது இலங்கைக் கடற்படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்துவது குறித்து கொழும்பு அரசிடம் புதுடில்லி அரசு முறையிட்டுள்ளது.

மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத்கான் சஹாய் இத்தகவலை வெளியிட்டார்.

ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு அவர் நேற்று சென்னை வந்து சேர்ந்தார்.

இங்கு செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், தமிழ் நாடு கடற்கரையோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாகக் கூறினார். [உ-எ]

## ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் திங்களன்று மீள நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்ற விஞ்ஞான, ஆங்கில, கணித பாட ஆசிரியர்களில் மீள நியமனம் பெறத் தெரிவானோருக்கு எதிர்வரும் திங்களன்று நியமனக் கடிதங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

மீள நியமனம் பெற விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் ஒருவருட ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவர். [உ-5]

## வெல்லாவெளியில் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்

யாழ்ப்பாணம், மார்ச் 29

மட்டக்களப்பு வெல்லாவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த படையினரும், செலோவினரும் தேடுதல் வேட்டைக்குச் சென்றபோது, விடுதலைப் புலிகள் அவர்களை வழிமறித்துத் தாக்கினர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு தும்பன்கேணியில் நடந்த இச்சம்பவத்தில் படையினரும் சகாக்களும் பின்வாங்கிச் சென்றனர். சேத விவரம் தெரியவரவில்லை.

தாக்குதல் சம்பவத்தின்பின் அப்பகுதியில் பொது மக்களான பொன்னையாகலாவதி [20வயது], அவரதுசகோதரன் பொன்னையா சிவநேசராசா [8 வயது] ஆகிய இருவரும் ஸ்ரீலங்காப் படையினரால் கொலை செய்யப்பட்டனர். அவர்களின் தந்தை பொன்னையா காயமடைந்தார். [அ]

## உள்ளூராட்சி தேர்தல் மே 11 ஆம் திகதி

கொழும்பு, மார்ச் 29

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளின் தேர்தல்கள் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி நடைபெறும்.

தேர்தல் ஆணையாளர் ஆர். பி. சந்திரானந்த டீ சில்வா இதனை நேற்று அறிவித்தார்.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவது நேற்று நண்பகலுடன் முடிவடைந்தது.

கடுகண்ணாவ நகரசபைக்கு ஐ. தே. க. உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

## அரியாலையில் ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், மார்ச் 29

அரியாலை கிழக்கு, செம்மணி, நாவற்குழிப் பகுதியிலும் நேற்று நண்பகல் இரண்டு மணிக்கு ஹெலிக்கொப்டர் ஒன்று கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டது. இதனால் பல வீடுகளின் கூரைகள் சேத [illegible] லித்தாக்குதல்கள் இடம்பெற்றன. [உ-3-15]

## இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடக் கூடாது

### புதிய தூதுவர் காரசாரம்

புதுடில்லி, மார்ச் 29

இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடக் கூடாது. அது ஒரு குடும்பத்திற்குள் நடக்கும் சண்டை.

இவ்வாறு இந்தியாவுக்கு இலங்கை தூதுவராக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. நெவில் கனகரத்னா கூறினார்.

புதுடில்லி செல்லும் வழியில் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் பங்கு பணி இல்லாமலேயே, அவர்களுடன் தொடர்பு வைக்காமலேயே இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் —

விடுதலைப் புலிகள் இயக்கம் மக்களின் நம்பிக்கைக்குரியதாக இருந்தால் அது தேர்தலில் போட்டியிடுவதை ஏன் தவிர்க்கிறது? —

வடக்கு - கிழக்கில் வாழும் வாக்காளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாததாலேயே அங்கு தேர்தலை நடத்த முடியவில்லை.

இந்திய — இலங்கை உடன்படிக்கையை செயற்படுத்த முடியாமற் போனமைக்கு இரு நாடுகளுமே பொறுப்பேற்க வேண்டும் — என்றும் திரு. நெவில் கனகரத்தினா சொன்னார். [அ-5]

## 30 தமிழ் விவசாயிகளும் 4மாணவரும்வெட்டிகொலை

### கிழக்கில் ஊர்காவலர் அட்டுழியம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

கிழக்கில் முஸ்லிம் ஊர்காவற் படையினர் தொடர்ந்தும் தமிழர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை [25ஆம் திகதி] காரைதீவில் இருந்து அட்டைப் பாலத்துக்கு அறுவடைக்காகச் சென்றுகொண்டிருந்த முப்பது தமிழ் விவசாயிகளை முஸ்லிம் ஊர்காவற்படையினர் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

அதே தினத்தில் தம்பிலுவிலில் இருந்து அக்கரைப்பற்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தமிழ் மாணவிகள் அறுவரை ஊர்காவற் படையினர் கடத்திச் சென்றனர். மேலும் நான்கு தமிழ் மாணவர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மல்லிகை விற்பனையாகின்றது

மார்ச் இதழ் வெளிவந்து விட்டது. இவ்விதழில் 'வரதரின் தீவாந்தியார்' தொடர் ஆரம்பமாகியுள்ளது. தரமான எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள் இடம் பெற்றுள்ளன. தொடர்ந்து படிக்கத் தவறாதீர்கள். புத்தகசாலைகளில் கிடைக்கும். [இ/5891]

### தேவை

பாவித்த சம்போ, ஓடிக்கலோன், Gum (கம்) Vicks போத்தல், பவுடர் டப்பா, போலப்பொயின்ட் பேனா சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் 12 மணி வரை வாங்கப்படும். S. சத்தியன் 55, மணிக்கூண்டு வீதி, கொழும்பு அருடிமோ பின்புறம், யாழ்ப்பாணம். [இ-5867]

### மணமகள் தேவை

யாழ். இந்து 32 வயது B. Sc. கணக்காளராக லண்டனில் வசிக்கும் மகம் நட்சத்திரம் உடைய மணமகனுக்கு படித்த அழகிய 26 வயது 5'6'' உயரமான மணமகள் தேவை. லண்டனில் உள்ளவர்களும் லண்டனுக்குச் செல்லக்கூடியவரும் சகல விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். கி. விஸ்வலிங்கம், ',யமுனா.' ஆனைக்கோட்டை. [16238]

யாழ். இந்து கனிஸில் இருந்து வந்தவர் 30 வயது நிரம்பிய மணமகனுக்கு உதயத்தில் செவ்வாய் குற்றமுள்ள கிரகபாவம் கூடிய, படித்த அழகிய மணமகள் தேவை. நட்சத்திரம் மகம், சீதனம் எதிர்பார்க்கவில்லை. தொடர்பு- ABCDE, விவாகப் பொருத்துனர் 328, நாவலர்வீதி, ஆனைப்பந்தி. [16245]

யாழ். இந்து கனடா பாங்கில் தொழில் புரியும் 27 வயது நிரம்பிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. நட்சத்திரம் புனர்பூசம், கிரகபாவம் குறைந்தவர். தொடர்பு: ABCDE, விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [16244]

### மணப்பெண்கள் தேவை

கனடாவில் குடியுரிமை பெற்ற இரு சகோதரர்களுக்கு ஆங்கில அறிவுடைய அழகிய மணப்பெண்கள் தேவை. பதிவுத்திருமணம் முடிந்ததும் கனடா கூட்டிச் செல்லப்படுவர். ஜ. திருவிளங்கம், புதிய மாங்கல்யா 16/16 வளன்புரம், கொழும்புத்துறை. [16243]

### மணமகன் தேவை

யாழ்ப்பாணம் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 36 வயது றோமன் கத்தோலிக்க பட்டதாரியான சட்டத்துறையைச் சார்ந்த மணகளுக்கு பெற்றோர் படித்த, பண்புள்ள, தகுதியான மணமகனைத் தேடுகின்றனர். விவரங்கள் சகலவற்றுடனும் விண்ணப்பிக்கவும். இல. 197, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [16248]

### A/L பொருளியல்

1992 புதிய பாடத்திட்டத் திற்கமைவான மாணவர் பயிற்சிக் கைநூல் வெளிவந்து விட்டது. ஆக்கியோன்: V. கருணாகரன் B. A. Hons வியாபாரிகள், மாணவ மன்றத்தினர் கழிவு விலையில் பெறலாம். தொடர்பு: 215, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16226]

### SLEAS

SLEAS – பரீட்சைக்குரிய நுண்ணறிவு, பொது உளச் சார்பு, கிரகித்தல் நூல்கள் எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: க. குணராசா, எம். ஏ. [16184]

### தவறிவிட்டது

சுன்னாகம் சந்தையில் 27-3-91ல் திருட்டுப்போன சைக்கிளுடன் இருந்த Draft ஐ தயவு செய்து சபாரத்தினம் 'திருப்பதி' அச்சுவேலி தெற்கு. அச்சுவேலி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு சைக்கிளை எடுத்தவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். [16249]

### விவசாயிகளிடம் அரிசியும் கொள்வனவு

கொழும்பு, மார்ச் 29
நெல் சந்தைப்படுத்தும் சபை இனி விவசாயிகளிடம் இருந்து அரிசியும் கொள்வனவு செய்யும்.

இந்த ஆண்டில் பத்தாயிரம் மெட்ரிக் தொன் அரிசியை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்ய சபை திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## 'A' LEVEL CENTRE

**Point - Pedro Road, 1st Lane,**
(Near to Mack Travels)
**Jaffna.**

**ENGLISH GRAMMAR CLASSES**
(BASIC MEDIUM and ADVANCED)
By Mr. A. Reginald
(The most popular Experienced and English Speaking Tutor)

**Commencing on: 31-03-1991 (Sun.) 9-45 a.m.**
**Sat. & Sun. 9-45**
[4810]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 - 01 - 1969
உதிர்வு: 12 - 04 - 1987
திதி: 29 - 03 - 1991

### அமரர் பவானி அருணாசலம்

அன்பு மகளே!
ஆண்டு நான்கு ஆனாலும்
ஆறவில்லை எம் இதயப்புண்
உங்கள் ஆத்மா சாந்திடையப்
பிரார்த்திக்கும்:

நா. அருணாசலம் குடும்பத்தினர்
வல்வெட்டி.

இராச வீதி,
கோப்பாய். [3897]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகம்: 25 — 05 — 1947
விண்ணகம்: 29 — 03 — 1988

### அமரர் சுப்பையா அருள்ராசா [தவம்]

[கிராமசேவை அலுவலர், ஈச்சமோட்டை]

''எல்லோரும் எல்லாமே எய்தப் பெற்று
இல்லாரும் உள்ளாரும் இல்லை என்ற
வல்லதொரு சமதர்ம தமிழீழந்தான்
வரவேண்டும்'' என்ற உந்தன் கனவு இன்று
நல்லபடி நனவாக நண்ணும் நாளில்
நமனுன்னைத் தன்வலையில் சிக்க வைத்தான்
சொல்லரிய வீரத்தால் தமிழீழத்தாய்
சொர்க்கபுரி யாகிடும் நாள் தூரமில்லை.

துணைவி, பிள்ளைகள், அன்னை,
சோதர, சோதரிகள்.

பிளைச்சர் வீதி,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம். [3893]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு: 25 — 03 — 1986
திதி: 29 — 03 — 1991

### அமரர் மு. சி. கனகரத்தினம்

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

13/3, நாயன்மார் வீதி,
நல்லூர் [16220]

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 26 - 07 - 1910
இறப்பு: 09 - 04 - 1990

### அமரர் கந்தையா விசுவலிங்கம்

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய்— நின்று
எம்மை வாழ்வித்த அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று கழிந்ததையா
ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
ஆறிடுமோ எம் துயர்.

உங்கள் பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி, மகள், மகன்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வேளவை,
அளவெட்டி-வடக்கு,
அளவெட்டி. 16154]

## கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில்: 23 - 6 - 1973
தாயக மீட்பில்: 21 - 3 - 1991

### வீரவேங்கை பீற்றர்

(சத்தியநாதன் சிறீஸ்கந்தராஜ்)
[மானிப்பாய் இந்துக்கல்லூரி, உயர்தர மாணவன்]

சிலாவத்துறை இராணுவமுகாம் தாக்குதலின் போது வீரமரணம் அடைந்த எமது புத்திரர் சிறீஸ்கந்தராஜ் [பீற்றர்] அவர்களுக்கும், அவருடன் வீரமரணம் அடைந்த ஏனைய வீரவேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அன்புள்ள அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்கா, உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

சோதிவேம்படி லேன்,
மானிப்பாய். [16246]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991-03-29

பக்கம்-3

# மாகாணசபை ஊழியர் சம்பளம்

# அடுத்த மாதம் கிடைப்பது சந்தேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம், கடன், கஷ்டநிவாரணப் படி ஆகிய கொடுப்பனவுகளை வழங்க மாகாணசபை ஜனவரி முதல் ஒதுக்கீடு எதையும் செய்யவில்லை. இதனால் அவர்களுக்கு அடுத்த மாதத்தில் சம்பளம் கிடைப்பது சந்தேக நிலைக்குள்ளாகி உள்ளது.

மாகாண சபை, இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் தனது ஊழியர்களின் கொடுப்பனவுகளுக்கென எந்தவித ஒதுக்கீட்டையுமோ அல்லது கட்டுநிதியையுமோ இதுவரை அனுப்பவில்லை.

ஜனவரி மாதம் முதல் பிரஸ்தாப ஊழியருக்கான சம்பளம் செயலகம் மூலம் மத்திய அரசின் நிதியில் இருந்து வழங்கப்பட்டது. மாகாண சபை நிதி இன்னும் ஒரு வாரத்திற்குள் கிடைக்காது விட்டால் அடுத்த மாதத்தில் இருந்து ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவது கஷ்டம் என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாகாணசபையின் கீழுள்ள திணைக்கள ஊழியர்களுக்கு கடன், விழா முற்பணம் போன்றவை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள திணைக்களங்கள், அரச நிறுவனங்களில் சுமார் 65 சதவீதமானவை மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. [அ-3]

## 100 ஏக்கரில் மட்டுமே பம்பாய் வெங்காயம்

அராலி, மார்ச் 29

கடந்த வருடம் அராலியில் 200 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்பட்ட பம்பாய் வெங்காயம் இந்தவருடம் 100 ஏக்கர் நிலத்தில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட உள்ளது.

மிகுதி நிலப்பரப்பில் பயறு, குரக்கன் போன்ற தானியப் பயிர்களை பயிர் செய்யும் நடவடிக்கைகளை அராலி மத்தி உற்பத்திக்குழு மேற்கொண்டு வருகின்றது.

இதற்குத் தேவையான இரசாயன உரம், எரிபொருள்கள் போன்றவற்றை கட்டுப்பாட்டு விலையில் வழங்க தமிழீழ ஆய்வு நிறுவனத்தைக் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [இ-12]

## திரிபோஷா இல்லாததால் போஷாக்கின்மை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

கெயர் ஸ்தாபனத்தால் அமுல் செய்யப்பட்ட திரிபோஷாத் திட்டத்தை சுகாதாரத் திணைக்களம்பொறுப் பேற்றுள்ளது.

கோதுமைத் தட்டுப்பாட்டால் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த தாய், சேய் நல அதிகாரி, வடபகுதியில் போஷாக்கின்மை அதிகரிப்பால் தாய்மாரும், குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். நமது பகுதியில் இடைக்கக்கூடிய ஜீவாகாரத்தை அரச சார்பற்ற நிறுவனங்கள் பெற்றுத் தரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். [இ-18]

## சிறுவர் பாதுகாப்பு நிதிய உதவியுடன் பாடப்புத்தகம்

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில்இல்லாத பிரதேசங்களில் மாணவருக்கு இலவச பாடப் புத்தகங்களை விநியோகம் செய்வதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம்உதவ முன் வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நகருக்கு வெளியே உள்ள சுமார் 75 சத வீதமான பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குரிய இப் பாடப்புத்தகங்கள் சைவப் பிரகாச வித்தியாசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இவை கறையானுக்கு இரையாகி வருவதாகவும கூறப்படுகிறது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களுக்கு போக்குவரத்து வசதிகள்இல்லாத காரணத்தினால் பாடப்புத்தக விநியோகம் இடம் பெறாதிருந்து வருகின்றது. [இ எ]

## நிர்வாக சேவைப் பரீட்சை; 91 பேருக்கு நியமனங்கள்

கொழும்பு, மார்ச் 29

நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி அடைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 91 பேருக்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை அமைச்சு விரைவில் நியமனங்களை வழங்க உள்ளது.

இது தொடர்பான நேர்முகப் பரீட்சை கொழும்பில் அமைச்சு அலுவலகத்தில் இம்மாதம் 30 ஆம் திகதி நடத்தப்படும். [இ-எ]

குவைத்திலும் சவூதியிலும்

## தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கே வேலை

கொழும்பு, மார்ச் 29

தொழில் நுட்பத்துறைகளில் பயிற்சி பெற்றவர்களுக்கே குவைத் மற்றும் சவூதி அரேபியாவில் உடனடி வேலை வாய்ப்பு உண்டு.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத் தலைவர் டேவிட் சொய்சா இத் தகவலை வெளியிட்டார்.

குவைத் மற்றும் சவூதி அரேபியா நாடுகளில் அண்மையில் சுற்றுப் பயணம் செய்து விட்டு திரும்பிய இலங்கைத் தூதுக்குழுவில் திரு. சொய்சாவும் இடம் பெற்றிருந்தார்.

இந்த நாடுகளில் அத்தியாவசிய சேவைகள் மீண்டும் இயங்க ஆரம்பித்த பின்னர் தான் பயிற்சி பெறாத இலங்கையரான இருபாலாருக்கும் தொழில் வாய்ப்புக் கிடைக்கும்.

தற்சமயம் அந்த நாடுகளில் தொழில் புரிய முன்வரும் தொழில் நுட்பபயிற்சிபெற்றவர்களைத் திரட்டி அனுப்ப பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படும்.

முன்னர் போன்று குவைத்தில் இன்று ஆடம்பர வாழ்வு இல்லை. தொழில் செய்யப் போகிறவர்களுக்கு கைநிறையச் சம்பளமும் இலவச விமான, தரைப்பயணமும் அங்கு வழங்கப்படும்.

இப்படி திரு. சொய்சா தெரிவித்தார். [இ-எ]

## முத்தவயோகிகள் நினைவு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 29

யோகர்சுவாமிகள், ஆறுமுகநாவலர், சுவாமி விவேகானந்தர் ஆகிய முத்தவயோகிகளின் நினைவு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.15 மணிக்கு நல்லூர் முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் வித்துவான் க. சி. குலரத்தினம், வித்துவான் க. குமாரசாமி, திரு. த. கணநாதலிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர். அத்துடன் நிலையத்தினர் நடத்திய பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களும் இதில் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளனர்.

குருஸ்தோத்திரம், பிரார்த்தனை என்பனவும் விழாவில் இடம்பெறும். [அ-த]

## ஊழியர் சேமலாப நிதி வட்டி அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 29

ஊழியர் சேமலாப நிதியின் வட்டி வீதம் பதினொன்றரைச் சத வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது வரை வட்டி வீதம் பதினொன்றாகவே இருந்தது.

## இன்று பெரிய வெள்ளிக்கிழமை

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் கிறிஸ்துநாதர் பாவிகளுக்காக சிலுவையில் அறையுண்டு மரித்து உயிர்த்தியாகம் செய்த தினமான பெரியவெள்ளிக்கிழமை இன்று ஆகும்.

இன்று கிறிஸ்தவ தேவாலயங்களில் நீண்ட ஆராதனைகள், பூசைகள் நடத்தப்படுகின்றன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் எனப்படும் உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆகும். [இ]

## பரிசோதனை குழுவிடம் சிக்கிய 9 வர்த்தகர்கள்

தென்மராட்சி, மார்ச் 29

தென்மராட்சி மேற்குப் பகுதியில் பொருள்களின் விலைகள் அதிகரித்து விற்ற ஒன்பது வர்த்தகர்கள் சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்க பரிசோதனைக் குழுவிடம் அகப்பட்டனர்.

அவர்கள் சாவகச்சேரி நகர விடுதலைப் புலிகளின் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டு ரூபா 250/- முதல் 750/- வரை அபராதம் செலுத்தினர். [இ-117]

## இசை, நடன நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகம் நடத்தும் இசை, நடன நிகழ்ச்சி இன்று வெள்ளி காலை 10 மணி முதல் ... கைலாசபதி அரங்கில் நடைபெறும். [இ]

## திட்டமிட்டபடி இன்று மாஸ்கோவில் பேரணி

மாஸ்கோ, மார்ச் 29

ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவின் தடை உத்தரவை மீறி இன்று [வெள்ளி] மாஸ்கோவில் ஆர்ப்பாட்டப் பேரணி திட்டமிட்டபடி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய மாநிலக் குடியரசுத் தலைவர் பொறிஸ் யெல்ட்சின் இத்தகவலை வெளியிட்டார்.

கோர்பச்சேவ் அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து இந்த பேரணி நடத்தப்படுகிறது.

இதனிடையில்- தடை உத்தரவை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தனது பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளது [இ-எ]

## பொருளாதார யுத்தம் என்கிறது ஈராக் அரசு

கொழும்பு, மார்ச் 29

வளைகுடாவில் நிரந்தரப் போர் நிறுத்தம் ஏற்பட ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் தயாரித்துள்ள தீர்மானம் ஈராக் மீது பொருளாதார யுத்தம் ஒன்றை பிரகடனப்படுத்துவதாக அமைந்து உள்ளது.

பக்தாத் அரசு முன்கண்டவாறு நேற்று குற்றஞ்சாட்டியது.

ஈராக் தம்மிடம் உள்ள இரசாயன மற்றும் பேரழிவு தரும் ஆயுதங்களை அழிக்கும் வரை, அந்நாட்டின் மீதான-மனிதாபிமான பொருள்களைத் தவிர்ந்த - ஏனைய பொருளாதாரத் தடையை நீக்கக்கூடாது என்று ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானம் கூறுகிறது. [இ-எ]

## குர்டிஷ் வசம் உள்ள இர்குக் நகர் சுற்றிவளைப்பு

குர்டிஷ் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் வயல்கள் உள்ள கிர்குக் நகரை மீண்டும் கைப்பற்றும் முயற்சியில் ஈராக் அரசுப் படைகள், அப் பகுதியைச் சுற்றி குவிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை-ஈராக் படைகளின் தாக்குதல்களை முறியடிக்கும் ஒரு நடவடிக்கையாக குர்டிஷ் படைகள் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை தீவிரமாக நடத்தி வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## குர்டிஷ் கிளர்ச்சியை அடக்க அமெரிக்கா 'பச்சைக் கொடி'

வாஷிங்டன், மார்ச் 29

ஈராக்கின் உள்நாட்டுக் கலவரத்தில் தலையீடு செய்யப் போவது இல்லை என்று அமெரிக்கா நேற்று அறிவித்தது,

குர்டிஷ் இனப்போராளிகள் நடத்தும் சண்டையை அடக்க ஈராக்கை அனுமதிப்பது என்றும் அமெரிக்க அரசு தீர்மானித்தது.

குர்டிஷ் கிளர்ச்சியை அடக்க, ஹெலிக்கொப்டர்களைப் பாவிக்க ஈராக் அரசுக்கு அனுமதி வழங்குவது என்றும் அமெரிக்க ராஜாங்க அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

ஈராக் உள்நாட்டுக் கலவரம் தொடர்பாக அமெரிக்கா இதுவரை கடைப்பிடித்து வந்த கொள்கையில் இது ஒரு பெரிய மாற்றம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி நிர்வாக சேவை தரம் III

## தளர்த்தப்பட்டிருக்கும் அடிப்படைத் தகைமைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 3 ஆம் தரத்துக்கு உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பும் இறுதித் தினம் ஏப்ரல் 10ஆம் திகதியாக நீடிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், அதிபர்கள் இதற்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகைமைகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

தளர்த்தப்பட்ட அடிப்படைத் தகைமைகள் பற்றிய விவரங்களைத் தெளிவுபடுத்தி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவற்றின் முக்கியமானவை வருமாறு:

1. உச்ச வயதெல்லை 45 வருடங்கள் என்பது நீக்கப்பட்டு வயதுக்கட்டுப்பாடு முற்றாகத் தளர்த்தப்பட்டுள்ளது.

2. பத்து வருட பயிற்றப்பட்ட ஆசிரிய சேவை தளர்த்தப்பட்டு ஐந்து வருட பயிற்றப்பட்ட ஆசிரிய சேவையுடைய ஆசிரியர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாகக் கணிக்கப்படுகின்றனர்.

3. ஐந்து வருட பட்டதாரி ஆசிரிய சேவையுடையவர்கள் அல்லது 5 வருட பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் அல்லது 5 வருட சேவையுடைய இராமநாதன் பல்கலைக்கழக கவின்கலை டிப்ளோமோ பட்டம் பெற்ற ஆசிரியர்கள் அல்லது 5 வருட சேவையுடைய தொழில் நுட்பக் கல்லூரி வர்த்தக டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

4. ஐந்து வருடத்திற்குக் குறைந்த பயிற்றப்பட்ட ஆசிரிய சேவையுடைய ஆசிரியர் ஒருவர், 10 வருட ஆசிரிய சேவையுடையவர் எனின் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

5. எந்த ஓர் ஆசிரியரும் மட்டுப்படுத்தப்பட்ட, திறந்த போட்டிப் பரீட்சைகளுக்கு ஆகக் கூடியது 7முறைகள் மாத்திரம் தோற்றலாம் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. [இ]

## கிழக்கு பல்கலை. மாணவர் பேராதனைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று இடம்பெயர்ந்த 112 மாணவர்களுக்கு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழி மூலம் அவர்கள் கல்வி பயில வசதியாகவே அந்த பல்கலைக்கழகத்தில் அவர்கள் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991-03-29 பக்கம்-04


சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலய
ரதோற்சவ விஞ்ஞாபனம்
(29 - 03 1991)



அம்பாள் அடியார்கள் அனைவரையும் ரதோற்சவத்தில் பங்குபற்றி, அருள் பெற்று உய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

| | |
|---|---|
| பூசை ஆரம்பம்: | முற்பகல் 11 மணி |
| வசந்த மண்டபப் பூசை: | பிற்பகல் 1 மணி |
| ரதாரோஹணம்: | பிற்பகல் 2 மணி |

பத்திரகாளி அம்பாள் அடியார்

[சி-4815]


# ரூ.13 கோடி கட்டுநிதி வந்தது; ஆனால்
# ஒய்வூதிய வவுச்சர்கள் வரவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கு பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்க 13 கோடி ரூபாவுக்கான கட்டுநிதி இலங்கை வங்கியின் யாழ். கிளைக்கு வந்து சேர்ந்துவிட்டது. ஆனால் வவுச்சர்கள் தான் இன்னும் வந்து சேரவில்லை.

யாழ். செயலக பிரதம கணக்காளர் திரு எஸ். சிவபாலன் இத்தகவலைத் தெரிவித்தார்.

கட்டுநிதி தொடர்பாக செயலகத்துக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் தற்போதுதான் அது வங்கிக்கு வந்து சேர்ந்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

இந்த நிதியில் இருந்து ஒய்வூதியமும், உணவு முத்திரைக் கொடுப்பனவும் வழங்கப்படவிருக்கிறது என்றார் அவர். [உ-3]

## ஜி. சீ. ஈ. [சா. த] பரீட்சை: ஜூனில் நடத்த முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 29

வடக்கு - கிழக்கு மாணவர்களுக்கான ஜி. சீ. ஈ. [சாதாரண தர] விசேட பரீட்சையை ஜூன் மாத நடுப்பகுதியில் நடத்த பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜி சீ.ஈ. [உயர்தர] விசேட பரீட்சை திட்டமிட்டபடி ஏப்ரல் நடுப்பகுதியில் நடைபெறுதல் அதேபோன்று ஜூன் மாதத்தில் சாதாரண தரப் பரீட்சையும் நடத்தப்படும் என்று கொழும்பு சென்று திரும்பிய யாழ்- கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-3]

## சரசாலையில் ஹெலி தாக்கு

தென்மராட்சி, மார்ச் 29

சில நாட்கள் இடைவெளியின் பின்னர் சாவகச்சேரி பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஹெலி தாக்குதல் நடத்தியது.

சரசாலைக்குச் சமீபமாகச் சனசன்புளியடியில் சென்று கொண்டிருந்த தேங்காய் மட்டை லொறி ஒன்றின் மீது ஹெலி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

சிறிது கால இடைவெளிக்குப் பின்னர் ஹெலி வந்ததால் மக்கள் பதற்றமுற்று பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர். நண்பகல் உணவருந்திக்கொண்டிருந்த சிலர் உணவையும் இடையில் விட்டுவிட்டு ஓடினர்.

[அ-117-31]

## பாரதிதாசன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் நடத்தும் பாரதிதாசன் நூற்றாண்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இதில் கலையரங்கு, இசையரங்கு, ஆய்வுரைகள், பட்டிமண்டபம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

காலை 9 00 மணிக்கு வி கே. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினரின் பங்கள இசையும், பேராசிரியர் சிவத்தம்பியின் ஆய்வுரையும், பிற்பகல் 2-00 மணிக்கு பட்டிமண்டபமும் நடைபெறும்.

பட்டிமண்டபத்துக்கு திரு. இ ஜெயராஜ் நடுவராகக் கடமையாற்றுவார்.

[இ-5]

## இப்படியும் நடக்கிறது

கோப்பாய், மார்ச் 29

மண்ணெண்ணெய் 'கானு'க்குள் பெற்றோல் கொண்டு வந்தவர் விசாரணைக்காகப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் வவுனியா தாண்டிக்குளம் முகாமில் இடம்பெற்றது

மண்ணெண்ணெய்க் கானுக்குள் பொலித்தீன் பை ஒன்றைச் செலுத்தி, அதற்குள் 2 லீற்றர் பெற்றோலைவிட்டு, பொலித்தீன் பையை இறுகக் கட்டிவிட்டு, அதற்குமேல் மண்ணெண்ணெயை இவர் நிரப்பி வந்தாராம்.

மண்ணெண்ணெய்க் கானுக்குள் பொலித்தீன் பை இருந்ததைச் சோதனையின்போது கண்டுவிட்ட சிப்பாய் ஒருவர் அங்கு நின்ற தமிழ்க் குழுவைச் சேர்ந்தவர்களின் உதவியுடன் கானுடன் நிலத்தில் ஊற்றியபோது பெற்றோல் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

பிரஸ்தாப நபர் படையினரால் [illegible] தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

[இ-72]


# முக்கிய அறிவித்தல்

ஆர். வி. ஜி. பீடி பெயரில் போலி பீடிகள் விற்பனை செய்யப்படுவதாக அறிய வந்துள்ளோம். போலி ஆர். வி. ஜி பீடிகள் விலையிலும், தரத்திலும் குறைந்தவை என்பதை பாவனையாளர் கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

அசல் ஆர். வி. ஜி பீடிகள் எமது ஸ்தாபன வாகனங்கள் மூலமே விற்பனை செய்யப்படுகின்றன.

குறைந்த விலையில் விற்பனையாகும் போலி ஆர். வி. ஜி பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

போலி ஆர். வி. ஜி பீடி விற்பனையாளர் பற்றிய தகவல்கள் வரவேற்கப்படும்.

ஆர். வி. ஜி. நிர்வாகம்
58, குறுக்குத் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[16167]


## மகாபொல கொடுப்பனவு
5 ஆம், 6 ஆம்
தவணைப் பணம்
(பங்குனி, சித்திரை - 1991)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்.

**முதலாம் வருட மாணவர்கள் (1989 / 90)**

| | | |
|---|---|---|
| கலைப் பிரிவு | 28-3-91 | 9 00 - 12-00 மு ப. |
| வர்த்தகப் பிரிவு | 01 4-91 | 9-00 - 12-00 மு.ப. |
| வியாபார-நிர்வாகப் பிரிவு | 03-4 91 | 1-30 - 3-00 பி ப. |
| மருத்துவ பீடம் | 28-3-91 | 1-30 - 3-00 பி.ப |
| பௌதீக-விஞ்ஞானப் பிரிவு | 01-4-91 | 9-00 - 12-00 மு.ப. |
| உயிரியல்-விஞ்ஞானப் பிரிவு | 03-4-91 | 1-30 - 3-00 பி ப. |

**இரண்டாம் வருட மாணவர்கள் (1988 / 89)**

| | | |
|---|---|---|
| கலைப் பிரிவு | 05-4-91 | 9-00 - 12-00 மு ப |
| வர்த்தகப் பிரிவு | 01-4-91 | 9-00 - 12-00 மு.ப. |
| வியாபார-நிர்வாகப் பிரிவு | 03-4-91 | 1-30 - 3-00 பி.ப. |
| மருத்துவ பீடம் | 05-4-91 | 1-30 - 3 00 பி.ப. |
| பௌதீக-விஞ்ஞானப் பிரிவு | 01 4-91 | 9-00 - 12-00 மு.ப. |
| உயிரியல்-விஞ்ஞானப் பிரிவு | 03-4-91 | 1-30 - 3-00 பி.ப. |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை.

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

★ விவசாயபீட மாணவர்களுக்குரிய கொடுப்பனவுகள் கிளிநொச்சியில் விவசாயபீடத்தில் வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- பதிவாளர்.

[சி/5892]


வெளிவந்துவிட்டது - விற்பனையாகின்றன

S. L. E. A. S. பரீட்சைக்கான வழிகாட்டி

நுண்ணறிவு / கிரகித்தல் / விடயஆய்வு
[நடைபெற்ற பரீட்சை வினா - விடைகளுடன்]

கேட்டு வாங்குங்கள் - அஸ்ரன் வெளியீடு.
[எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்]

[சி-4816]



# விசேட அறிவித்தல்

S. L. E. A. S. (Ltd.)

விண்ணப்ப முடிவு திகதி Apr.-10 வரை நீடிக்கப்பட்டுள்ளது

இது வரை விண்ணப்பிக்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

போட்டிப் பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள் 2ஆம் பிரிவு

ஆரம்பம்: 30 — 03 — 1991 (10 a.m.)

பாடநெறி: கிரகித்தல், நுண்ணறிவு,
கல்வி நிருவாகம் [விடய ஆய்வு]

தகைமைகள்

1. பட்டதாரி/ஆசிரியப் பயிற்சி சான்றிதழ் உடையோராயின் 5 வருட சேவை அல்லது
2. ஆசிரியப் பயிற்சி சான்றிதழ் பெற்ற பட்டதாரி ஆசிரியர், அல்லது
3. 10 வருடம் சேவையாற்றிய பயிற்சி பெற்ற ஆசிரியர், அல்லது
4. நடனம், சங்கீதம், கைத்தொழில், உடற்கல்வி, சித்திரக்கலை, மனையியல் ஆசிரியர்களாயின் 5 வருட சேவை

பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில் மட்டும்.
★ இலவச பாடக்குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 300.00

விவரங்களுக்கு: நேரில் மு. ப 9-00 — 12-00

ASTAN INSTITUTE
101/10, Stanley Road, JAFFNA.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

[சி-4813]


# மரண அறிவித்தல்

## திருமதி விவேகசிரோண்மணி இராசதுரை

திருமதி விவேகசிரோண்மணி இராசதுரை அவர்கள் [25-3-91] திங்கள் அன்று காலமானார். அன்னார் இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தப்பசேகரம் காலஞ்சென்ற அன்னபூரணி ஆகியோரின் அன்புப் புதல்வியும், சே தேவசிரோண்மணி, காலஞ்சென்ற க. சோமகலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25 - 3 - 91 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
செ இராசதுரை.

கந்தோக்கடி,
வைகுந்தப் பிள்ளையார் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

[16247]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இந்தியாவின் இரட்டைப் போக்கு

இந்தியாவில் - தமிழகத்தில் - தங்கி உள்ள ஈழத் தமிழ் அகதிகளுக்கு சர்வதேச உதவிகள் வழங்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை இந்தியா தடுத்து வருகிறது. அமெரிக்க அகதிகள் குழுவின் பிரதிநிதிகளில் ஒருவரான கோர்ட்லண்ட் ரொபின்சன் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார். அமெரிக்க வழக்கறிஞர் சங்கத்தின், சர்வதேச மனித உரிமை உபகுழுவின் கூட்டத்தில் பேசுகையில், திரு ரொபின்சன் இந்தியாவை இது விடயத்தில் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஈழத் தமிழர்கள், தமது சொந்த மண்ணில் சகிக்க முடியாத அளவுக்கு இன்னல்கள் வரும்போது, ஸ்ரீலங்காப் படைகளினால் உயிருக்கு ஆபத்து வரும் போது, தமிழகத்திற்குச் சென்று தஞ்சமடையவே விரும்புகிறார்கள். தமிழக மக்கள் ஈழத் தமிழர்களுக்கு மூத்த சகோதரன் போல. அந்த உரிமை மூதலிடமும். சொற்ப நேரத்தில் இடம் பெயர்ந்து விடும் வசதி இரண்டாவது இடமும் பெறுவதன் விளைவாக இயல்பாகவே தமிழகத்தை நாடுகிறார்கள்.

ஈழத்தமிழ் அகதிகள் லட்சக்கணக்கில் தமிழகம் செல்லும் போது அவர்களுக்கான வசதிகளையும், உதவிகளையும் செய்வது இந்தியாவுக்குக் கஷ்டமான காரியம் தான். அதற்கான பொருளாதார வளங்களைக் கண்டு பிடிப்பது கடினம் தான்.

ஆனால் ஈழ அகதிகளுக்கு மனிதாபிமான ரீதியில் கைகொடுக்க முன்வரும் சர்வதேச — வெளிநாட்டு — நிறுவனங்களின் உதவிகளை இந்தியா நிராகரிப்பது ஏன் என்பது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஈழத் தமிழ் அகதிகளைப் பராமரிப்பது தமக்குக் கஷ்டம் என்று நினைத்துத்தான், உணர்ந்துதான், அவர்களைத் திரும்ப அனுப்பி மன்னாரில் ஒரு முகாமை நிறுவ இந்திய அரசு ஸ்ரீலங்கா அரசோடு சேர்ந்து முயற்சி செய்தது, சதி செய்தது. ஆனால் அது, எதிர்பார்த்ததுபோல வெற்றி அளிக்கவில்லை.

சர்வதேச உதவிகளைப் பெற்றால், ஈழத் தமிழ் அகதிகள் தமக்குப் பெரும் பாரம் என்று கூறமுடியாது. அந்தப் பிடி தளர்ந்தால், ஈழ அகதிகளையே ஆயுதமாகப் பயன்படுத்தி தமது நலன்களை இலங்கையில் பாதுகாத்துக் கொள்ள முடியாது. அதாவது இலங்கை அரசு மீதோ அல்லது ஈழத் தமிழர் மீதோ, தான் நினைக்கும் விவகாரங்களைத் திணிக்க முடியாது- என்றெல்லாம் இந்தியா எண்ணியிருக்க வேண்டும்.

ஈழத் தமிழ் அகதிகளை தனது அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், மனிதாபிமான ரீதியிலேயே இந்தியா உதவுகிறதெனின், அகதிகளுக்கான வெளிநாட்டு உதவிகளை நிராகரிக்க எவ்வித நியாயமும் இல்லை. அவ்வாறு நிராகரிப்பது அதன் இரட்டைப் போக்கை, தளம்பல் நிலையையே எடுத்துக்காட்டுகிறது

மனிதாபிமான நீதிக்கும், மனிதப் பண்புகளுக்கும் மதிப்பளித்த காந்தியும், புத்தரும் மற்றும் மகான்மாரும் பிறந்த இந்தியா, இப்போது அரசியல் ஒன்றுக்கே முதலிடம் கொடுத்து மற்றவையை மறந்து கீழ்நோக்கிப் போவது கவலைக்குரியதே.

# குறிகாட்டுவானை நோக்கி
# கடற்படையினர் ஷெல் வீச்சு

## பயிர் நிலங்கள் நாசம்

புங்குடுதீவு, மார்ச் 29

நயினாதீவு கடற்படையினர் குறிகாட்டுவான்பகுதியை இலக்கு வைத்து அடிக்கடி ஷெல் தாக்குதல் மேற்கொண்டு வருகின்றனர்;

கடந்த வாரம் இரு தடவைகள் இப்படித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த ஷெல்களினால் குறிகாட்டுவான் கரையோரப் பகுதியில் உள்ள காய்கறித் தோட்டங்கள் சில முற்று முழுதாகச் சேதமடைந்துள்ளன. கடற்படையினரின் இந் நடவடிக்கை காரணமாக குறிகாட்டுவான் கரையோரங்களில் வசித்து வரும் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர். [இ-131]

## விஞ்ஞான சிறப்புப் பட்டதாரிகள் தேர்வில் சித்தி அடைந்தோர்

விஞ்ஞான சிறப்புப் பட்டதாரிகள் [1989] தேர்வில் சித்தி அடைந்தோர் பற்றிய விவரங்கள் யாழ். பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

தாவரவியல்:- முதற்பிரிவு செல்வி. ரி. மங்கலநாயகி.

இரண்டாம் தரம் [மேற் பிரிவு] செல்வி கே.குலரஜனி, செல்வி என். இந்துமதி.

இரண்டாம் தரம் [கீழ்ப் பிரிவு] செல்வி வி. அருள் சாந்தி, செல்வி என் ஞானகுமாரி, செல்வி ஏ. கலைவாணி, செல்வி எஸ். சசிரேகா, எ. சி. தவரஞ்சிற்.

தாவரவியலிற்கான மூத்த தம்பி சுவாமிநாதன் நினைவுப் புலமைப்பரிசிலும், தாவரவியலுக்கான தங்கப்பதக்கமும் செல்வி ரி. மங்கலநாயகிக்கு வழங்கப்பட்டுள்ளது.

பௌதிகவியல்:- இரண்டாம் தரம் [மேற்பிரிவு] கே. கணேசன்.

இரண்டாம் தரம் [கீழ்ப் பிரிவு] ஜே. ஏ. டி. ஜெகதீசன்.

சாதாரண சித்தி ஏ. ஜோசப், ரி. ரவிச்சந்தர்.

பௌதிகவியலுக்கான சேர். அருணாசலம் மகாதேவா நினைவுப் பரிசு கே. கணேசனுக்கு வழங்கப்பட்டது,

[இ]

## ப. நோ. கூ. ச. தலைவர்கள் மாநாடு

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மாநாடு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. இ. சிவமகாராசா மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார். [இ]

## 72 பேர் பற்றி இன்னும் தகவல் எதுவும் இல்லை

காங்கேசன்துறை, மார்ச் 29

இராணுவ நடவடிக்கைகளின் போது வலி-வடக்கில் காணாமற்போன 72 பேர் பற்றி இது வரை தகவல் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை, தையிட்டி, பலாலி, வீமன்காமம் பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவர்கள் ஆவார்.

இராணுவ நடவடிக்கையின் போது சிலர் வெளியேற முடியாமல் இராணுவத்திடம் சிக்குண்டிருக்கலாம் என்றும் சிலர் வெளியேறிய பின் வீடுகளை பார்க்கப் போன போது சிக்கி இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

[இ-68]

## சாளியில் ஏறிய சைக்கிள்கள்

பூநகரி, மார்ச் 29

'சாளி' மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இரு சைக்கிள்களை தமது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு தலைமறைவாகினர்.

கடந்த திங்கட்கிழமை பூநகரி மகாவித்தியாலயத்தில் இச்சம்பவம் நடந்தது.

அங்கு மாணவர் மன்றக் கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது சாளி மோட்டார் சைக்கிளில் வந்த அந்த இருவரும் பாடசாலை வேலிக்கு மேலாக ஏறி உள் சென்றனர். அங்கிருந்த இரு 'லேடீஸ்' சைக்கிள்களையும் தூக்கிக்கொண்டு வந்து தமது சாளி மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கட்டிக்கொண்டு அங்கிருந்து தலைமறைவாகினர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

[இ-135]

## வியாபாரி காயம்

தென்மராட்சி, மார்ச் 29

இரவு ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஊரியான் பகுதியில் வீழ்ந்து வெடித்த போது, அவ்வழியால் சென்று கொண்டிருந்த சைக்கிள் வியாபாரி ஒருவர் காயமடைந்தார். [இ-117]

# கிழக்கிலே உதித்து வடக்கிற்காக உழைத்த சுவாமி விபுலாநந்தர்

சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழா அடுத்த ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இப்போதே ஆரம்பமாகிவிட்டது. இன்று 29 - 3 - 1991 அவரது 99 ஆவது பிறந்ததினமாகும். அதனையொட்டி இக்கட்டுரையை வெளியிடுகின்றோம்.

"உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" — என்ற வரிமூலம் தமிழ் உள்ளங்களிலே நிலையான இடத்தைப் பிடித்துக்கொண்டவர் சுவாமி விபுலாநந்தர்.

29-3-1892ஆம் ஆண்டில் பிறந்த சுவாமிகள் 19-7-1947 இல் மறைந்தார்.

ஐம்பத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்த சுவாமி விபுலாநந்தர் தமிழ் உலகுக்கு ஆற்றிய பணி தனித்துவமானது. கிழக்கிலே உதித்த சுவாமி விபுலாநந்தர், வடக்கின் கல்வி, சமயம் மற்றும் தமிழ் வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணித்துக்கொண்டார்,

அடுத்த ஆண்டு, சுவாமியின் நூற்றாண்டு பிறந்த தினவிழா ஆண்டாக மலர்கின்றது.

சுவாமியின் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட மட்டக்களப்பிலே நூற்றாண்டு விழாச் சபை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில்- யாழ்ப்பாணத்தில் கல்வி வளர்ச்சிக்காகச் சுவாமி ஆற்றிய அரும் பணிகளை நாம் இங்கு நினைவு கூருவது பொருத்தமானதாகும்.

சுவாமிகளின் தந்தையார் சாமித்தம்பி. தாயார் கண்ணம்மை. கண்ணம்மையின் தந்தையாரான இராசகோபாலபிள்ளை யாழ்ப்பாணம் - உடுவிலைச் சேர்ந்த இராமநாதர் புதல்வர் வைரமுத்துவின் மகன் ஆவார்.

கண்ணம்மையாரின் தாயாரின் தாயார்யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சேதுகாவலரின் புதல்வி ஆவார். சுவாமியின் குழந்தைப் பெயர் மயில்வாகனம் ஆகும். 1922இல் துறவு வாழ்க்கையை மேற்கொண்ட போது அவர் முதலில் பெற்ற பெயர் பிரபோதசைதன்யர் ஆகும்.

1924ஆம் ஆண்டு சித்திரை மாதப் பௌர்ணமியில் இராமகிருஷ்ண சங்க மடத்துத் தலைவர் சுவாமி சிவானந்தரிடமிருந்து அவர் சந்நியாச தீட்சை பெற்றார். அப்போது அவர் பெற்ற பெயர் சுவாமி விபுலாநந்தர் ஆகும்.

### யாழ்ப்பாணத்தில்

தனது 25ஆவது வயதில் பண்டிதர் மயில்வாகனனார் என்ற பெயரில் ஆசிரியரான சுவாமிகள் 1917ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகச் சேர்ந்தார்.

அச்சமயம் சுவாமியும் அவரது நண்பர்கள் சிலரும் சேர்ந்து விவேகானந்தசபை ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவினார்கள். ஆனைப்பந்தியில் உள்ள வீடு ஒன்றில் அச்சபை செயற்பட்டு வந்தது.

1919இல் சுவாமிகள் லண்டன் பல்கலைக்கழக பி எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்தார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபராக பண்டிதர் சாமித்தம்பி மயில்வாகனனார் பி. எஸ். ஸி. என்ற பெயரில் பணிபுரிந்தார்;

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் விஞ்ஞான ஆய்வு கூடம் ஒன்றை அவர் நிறுவியதுடன் விஞ்ஞான பாடங்களையும் அங்கு சுவாமியே போதித்து வந்தார்.

### யோகர் சுவாமியுடன் தொடர்பு

ஆனைப்பந்தியில் வாழ்ந்து வந்த காலத்தில் யோகசுவாமிகளுடன் அவர் தொடர்பு கொண்டிருந்தார்.

அது பற்றி புலவர் மணி [illegible] ன் வருமாறு கூறுகிறார்.

"முன்பெல்லாம் அகக்கண்ணால் கண்டு அன்புக்கிழமை பூண்டுள்ள எனக்கு 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பண்டித மயில்வாகனனாரின் நேர்முகக் காட்சி கிடைத்தது.

ஆனைப்பந்தியில் [சுவாமி] அவர்கள் வசித்த வீடு ஒரு பொதியில் [பொது - இல்] போன்று காட்சியளித்தது.

பெரிய படிப்பாளிகள், உயர்தரக்கல்வி பெறும் இளைஞர்கள், பொதுநலத் தொண்டர்கள் பலர் அங்கு வருவார்கள்.

'அரிதாகத் தரிசனம் அளிக்கும்போது யோகசுவாமிகளும் அங்கு காட்சியளிப்பார்கள்.

யோகசுவாமிகளின் அருள் நோக்கத்தால் அவ்வீடு புத்தொளியும், புதுமலர்ச்சியும் பெற்றுத் திகழ்ந்தது. யோகசுவாமிகளுக்கு பண்டிதர் மயில்வாகனனார் மீது அளவு கடந்த கருணை. உள்ளிருக்கும் ஆன்மாவைக் கண்டு கொண்டார்' — இப்படி புலவர்மணி கூறுகிறார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபராக சுவாமி இருந்த போது தான் இராமகிருஷ்ண சங்க மைலாப்பூர் மடத்துத் தலைவராக இருந்த சுவாமி சர்வானந்தா யாழ்ப்பாணம் வந்தார்.

தமது வாழ்வின் இலட்சியமான துறவு வாழ்க்கையை நிறைவேற்றுதற்கு சுவாமி சர்வானந்தாவை உதாரண புருஷராக விபுலாநந்தர் கண்டார்.

1922 இல் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முகாமையாளர் திருவிளங்கம் சிவபதமடையவே, துறவு வாழ்க்கையை மேற்கொள்ள விபுலாநந்தர் சென்னை சென்றார்.

### வைத்திஸ்வரவித்தியாலயம்

சுவாமி விபுலாநந்தராக சென்னையில் இருந்து திரும்பிய அவர் இலங்கையில் இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளுக்கு முகாமையாளரானார்.

1926இல் வண்ணை. வைத்தீஸ்வர வித்தியாலயத்தை சுவாமிகள் ஆரம்பித்தார்.

1927 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வாலிபர் மாநாட்டுக்கு தலைவராக இருந்து காந்திஜியை வரவேற்றார்.

தமிழ்நாடு அண்ணாமாலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக பணிபுரிந்து 1943 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகப் பதவி ஏற்றார்.

இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற எண்ணம் உருவானபோது, "யாழ்ப்பாணத்தைப் புறக்கணித்து தும்பறையை நாடிச் செல்வது அவலை நினைத்து உரலை இடித்தது போலாகுமன்றோ?" - என்று சுவாமிகள் கட்டுரை ஒன்று எழுதி வெளியிட்டார். 'யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகம்' என்ற தலைப்பில் அக்கட்டுரை, 1960ஆம் ஆண்டில் இந்துசாதனம் பத்திரிகையில் வண்ணை. வைத்தீஸ்வர வித்தியாலய அதிபராகப் பணிபுரிந்த திரு. அம்பிகைபாகனால் பிரசுரிக்கப்பட்டது.

சுவாமிகளின் இலட்சியப் படைப்பான யாழ் நூல், 5-6-1947 இல் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருக்கொள்ளம் பூதூரத்தில் அரங்கேற்றப்பட்டது.

இலங்கை திரும்பிய சுவாமிகள் கடும் சுகவீனமுற்றார். 19-7-1947இல் சுவாமிகள் சிவபதமடைந்தார், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் அவரது பூதவுடல் சமாதி வைக்கப்பட்டது.

அவரது சமாதியில் அவர் இயற்றிய பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

அதில் ஒன்றாக பின்வரும் பாடலும் உள்ளது.

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ள லடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது!

நன்றி:
'விபுலாநந்தர் உள்ளம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 6

29.03.1991

# நாளைய பரீட்சைக்கு ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், மார்ச் 29

நாளை நடைபெறவிருக்கும் ஐந்தாம் ஆண்டு விசேட புலமைப் பரிசில் பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டிருப்பதாக யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

பரீட்சையை சுமூகமாக நடத்த சகல தரப்பினரினதும் ஒத்துழைப்பை அவர் கோரியுள்ளார்.

பரீட்சை நிலையங்களில் கடமையாற்றும், மற்றும் ஊழியர்களுக்கான இறுதி அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. [உ-3]

# வவுனியாவுக்கு விடைத்தாள் செஞ்சிலுவை வாகனத்தில்!

யாழ்ப்பாணம், மார்ச் 29

நாளை நடைபெறும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் விசேட பரீட்சையின் விடைத்தாள்களை வவுனியாவிற்கு எடுத்துச்சென்று ஒப்படைக்கும் பொறுப்பை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஏற்றுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலிருந்து விடைத்தாள்களை இந்தக் குழு எடுத்துச் சென்று வவுனியா கல்விப்பணிப்பாளரிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [உ-3]

# காங்கேசன் மாணவர்களுக்கு விசேட பரீட்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம் மார்ச் 29

காங்கேசன்துறை கல்விக் கொத்தணியில் இடம் பெயர்ந்த மாணவர்கள் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நடேஸ்வரா கனிஷ்ட ம. வி, காங்கேசன்துறை ம. வி, காங்கேசன்துறை றோ. க. வி. ஆகிய பாடசாலை மாணவர்களை மல்லாகம் மகா வித்தியாலயத்திலும்—

மயிலிட்டி வடக்கு கலைமகள் ம. வி., தையிட்டி சிவகுருநாத வி., தையிட்டி கணேசா வி., ஊறணி கனிஷ்ட வி. ஆகிய பாடசாலைகளின் மாணவர்களை மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திலும் —

மயிலிட்டி றோ. க. வி. பளாலி வடக்கு அ. த. க. பா., பளாலி சித்தி விநாயகர் வி., ஆகிய பாடசாலைகளின் மாணவர்களைபண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயத்திலும் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. [உ-3]

# பீஹார் அரசைக் கலைக்க இ. காங்கிரஸ் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 29

பீஹார் மாநில அரசை கலைத்து அங்கு ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வரும்படி இந்திரா காங்கிரஸ் ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு கோரிக்கை விடுத்துள்ளது

திரு. ராஜீவ் காந்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது பீஹார் மாநிலத்தில் பயங்கரவாதம் தலைவிரித்தாடுவதாகவும் அதற்கு இத்தாக்குதல் சம்பவம் உதாரணமாக அமைந்துள்ளது என்றும் காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் எம். ஜே. அக்பர் சொன்னார். [உ-எ[

## ஜி. சீ. ஈ [உயர்தர] விசேட பரீட்சை:

# மீட்டல் வகுப்புகளை ஆரம்பிக்கப் பணிப்பு

''யாழ். மாவட்டத்தில் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி சீ ஈ [உயர்தர] விசேட பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன. எனவே பாடசாலைகளில் மீட்டல் வகுப்புக்களை உடனே ஆரம்பிக்க வேண்டும்.''

பாடசாலை அதிபர், ஆசிரியர்களிடம் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இவ்வாறு கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதே வேளை—

இந்தப் பரீட்சை நடைபெறவிருக்கும் நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும், பரீட்சை மேற்பார்வையாளர்கள் மற்றும் பரீட்சை சம்பந்தமான ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

விசேட பரீட்சை தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக கொழும்பில் எதிர்வரும் எட்டாம் திகதி கூட்டம் ஒன்று நடைபெற விருக்கிறது.

இக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொள்வர். [உ-3]

# குண்டுவெடிப்புக்கு காரணம் காந்தரூபன் குழுவினராம்!

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கொல்லப்பட்ட ஹவ்லொக் வீதி வெடிகுண்டு விபத்து சம்பவத்துக்குக் காரணமாயிருந்தது விடுதலைப் புலிகளின் காந்தரூபன் குழுவினரே என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

கொலையாளியின் பெயர் இளையதம்பி கிருபாலன் என்றும் அவர் ஐரோப்பாவிலிருந்து இந்தியா வழியாக சம்பவம்நடப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்தார் என்றும்—

அவரை மடக்கிப் பிடிக்கப் பொலீஸ் வலை விரித்துள்ளதாகவும்—

அதன் பொருட்டு இந்திய அதிகாரிகளின் உதவியும் நாடப்பட்டிருப்பதாகவும்— ரணதுங்கா சொன்னார். [அ-5]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாணவர் ஒன்று கூடல்

முத்தமிழ் விழாவிற்கு தொண்டர்களாக பணிபுரிய தமது பெயர்களைப் பதிவு செய்த வலிகாமம் பகுதி மாணவர் இயக்க உறுப்பினர்கள் அனைவரும் இன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சமூகமளிக்கும் படி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் கேட்டுள்ளது. [உ]

# வனசிங்கா நினைவுப் பேருரை

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் டி. எஸ். கே. வனசிங்க நினைவுப் பேருரை நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9-30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா நினைவுப் பேருரை நிகழ்த்துவார். [அ-3]

# குவேனி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 39

தமிழ்த்தாய்ப் பதிப்பகத்தினரின் வெளியீடான செங்கை ஆழியான் எழுதிய 'குவேனி' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வளவை வளவன் தலைமையில் நடைபெறவிருக்கும் மேற்படி விழாவின் வெளியீட்டுரையை திரு. ரவியும், கருத்துரைகளை பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி சோ. கிருஷ்ணராசா ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்

முதல் பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. டிவகலால பெறுவார். [அ-3]

# கீரிமலையில்....,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தல்களை நடத்த—

காங்கேசன் கடலிலிருந்து கடற்படைக் கப்பல்கள் பீரங்கி வேட்டுக்களைத் தீர்க்க - படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்திய வண்ணம் காங்கேசன்துறை— கீரிமலை வீதியால் முன்னேற முயன்றனர்.

விடுதலைப் புலிகள் அவர்களைத் தடுத்து நிறுத்தி முகாமுக்கு பின்வாங்கச் செய்யும் விதத்தில், முனைப்புடன் பதில் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது

நேரடி மோதல் பல மணி நேரம் நீடித்த வண்ணம் இருந்தது. மாலை வரை அப்பகுதியில் தொடர்ந்து வேட்டு மற்றும் ஷெல் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன.

மாவிட்டபுரம், தெல்லிப்பழை, பன்னாலை, கொல்லங்கலட்டி, வீமான். கீரிமலை, ஏழாலை, மல்லாகம், கருகம்பானை, சுன்னாகம் ஆகிய பகுதிகளிலும் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

பன்னாலை, கிரிமலை, சேந்தான்குளம், கொல்லன் கலட்டி ஆகிய பகுதிகளில் பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்றைய சண்டையின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஜெயன் [வேலாயுதம் ஜெயகாந்தன் — பன்னாலை] என்ற போராளி வீரமரணம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்தோ, சண்டையினால் ஏற்பட்ட விளைவுகள் குறித்தோ விவரமான தகவல்கள் ஏதும் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.

சேந்தான்குளம் கரையோரப் பகுதி ஊடாகவும் படையினர் கரையிறங்க முயற்சித்ததாக ஒரு செய்தி தெரிவித்தது [illegible] ஜிதம் செய்ய முடியவில்லை. [உ-8-68-15]

## மருதானை லொட்ஜில் இருந்த

# வடபகுதி தமிழர் 32 பேர் இப்போது வெலிக்கடையில்!

யாழ்ப்பாணம், மார்ச் 29

கொழும்பில் மருதானையில் உள்ள ''லொட்ஜ்'' ஒன்றில் தங்கியிருந்த வடபகுதியைச் சேர்ந்த 32 பேர் அண்மையில் பொலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்; இவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

கைதானவர்கள் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புத் தேடிச் செல்ல இருந்தவர்கள் என்றும், அவர்களில் அனேகர் நவாலி, வட்டுக்கோட்டை, வடலியடைப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிய வருகிறது.

கைதானவர்கள் வெளிநாட்டுவேலைவாய்ப்புஏஜன்சி நடத்தும் ஒருவருக்குச் சொந்தமான ''லொட்ஜில்'' தங்கியிருந்தவர்கள் ஆவர். அதற்கு அருகில் வசிக்கும் வேறு இனத்தைச் சேர்ந்தவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே பொலீசார் அங்கு வந்ததாகவும் சொல்லப்படுகிறது. [அ-100]

# யாழ். ஆஸ்பத்திரிக்கு புலிகள் பாதுகாப்பா?

## செஞ்சிலுவை சங்கம் மறுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் விடுதலைப் புலிகளுக்கு விடுதலைப் புலிகளின் ஆயுதம் தாங்கிய உறுப்பினர்கள் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர் என்ற செய்தி தவறானது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நேற்று யாழ்ப்பாணத்தில் விடுத்த பத்திரிகை அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள் பாதுகாப்பு வழங்குகின்றனர் என்று 1991 மார்ச் 27 இல் கொழும்பு தினசரிப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி இருந்தது. இந்த தகவல் சரியானது அல்ல.

யுத்தத்தில் காயம் அடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் — ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினர்— யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவது உண்மைதான். ஆனால் ஆயுதம் தரித்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஆஸ்பத்திரிப் பகுதிக்குள் நிலைகொண்டுள்ளனர் என்பது தவறானது ஆகும்.

ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட ஓர் உடன்பாட்டுக்கு அமைய யாழ். போதனா வைத்தியசாலை 1990 நவம்பர் முதல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பில் இருந்து வருகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையிலும் அதனைச் சூழ உள்ள பாதுகாப்பு வலயத்திலும் ஆயுத முகாம் எதனையும் நிறுவ முடியாது என்பதில் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மருத்துவ நடவடிக்கை எதிலும் ஈடுபடுவது கிடையாது. ஆனால் இந்த வைத்தியசாலை தொடர்பான உடன்பாடு சரிவர அமுல் செய்யப்படுவதை உறுதிப் படுத்துமுகமாக ஆஸ்பத்திரிப் பகுதியிலேயே எந்நேரமும் நிலைகொண்டுள்ளது. சமீபத்தில் எந்தவித மீறல்கள் குறித்தும் எமக்கு அறிவிக்கப்படவில்லை.



# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை திருச்சிற்றம்பலம்

[Retired Chief Inspector of Police]

ஒய்வுபெற்ற பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சங்கரப்பிள்ளை திருச்சிற்றம்பலம் அவர்கள் 28 - 03 - 91 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் பத்மாவதியின் அன்புக்கணவரும் சங்கரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சின்னத்தம்பி தம்பதிகளின் மருமகனும், திருச்செல்வம் [நோர்வே], காலம் சென்ற சுரேந்திரன், திருச்செல்வி [நோர்வே], தேன்மொழி ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி [நோர்வே] யின் மாமனும் ச. சிவகுருநாதன், திருமதி ம. தருமலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29 - 03 - 91 வெள்ளிக்கிழமை பி. ப 2.00 மணிக்கு நடைபெற்று செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உறவினரும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மனைவியும், பிள்ளைகளும்

57 அம்பாள் வீதி
நாயன்மார்க்கட்டு,
யாழ்ப்பாணம்.

[15941]

## திருமதி ஞானப்பு சுவானி

திருமதி ஞானப்பு சுவானி — இளமருதங்குளம் 28 - 3 - 91 இல் காலமானார். இவர் சுவானி அவர்களின் அன்பு மனைவியும்; சந்தியோகு, அலேஸ், மாசில்லாமரி, அன்னம்மா, ஞானசவுந்தரி, மரியாம்பிள்ளை, அருட்சகோதரி கிளேயா [தி. கி] அவர்களின் அன்புத் தாயாரும் மரியம்மா, பரிமளம், கபிரியேல் பிள்ளை, மரியநாயகம், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். மரணச்சடங்கு பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:

அருட்சகோதரி கிளேயா
திருச்சிலுவை கன்னியர்மடம்
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

இளமருதங்குளம்
சேமமடு
வவுனியா.

[15942]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org